**தலைப்பு 155 – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன தலைப்பு 155 கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 155 - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அந்த ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கை திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.3.2 |
| | | 2. | கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதிலான குறைபாடுகள். | 2.12 (அ) |
| | | 3. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.13 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று உருவாக்கப்படல் வேண்டும். | 1. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.9 |
| | | 2. | மனிதவள முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.14 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான | 1. | செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிடல். | 2.3.3(ஆ) |
| | | 2. | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள் | 2.3.3(இ) |
| | | 3. | வெளிநாட்டு உதவி | 2.4.1(அ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | | செயற்திட்டங்களின் செயலாற்றல் நிறைவேற்றாமை. | |
| | | 4. | வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் பணம் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்தல். | 2.4.1(இ) |
| | | 5. | வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் நலன்கள் மக்களுக்கு கிடைத்துள்ளதா என பின்தொடர்தலொன்று மேற்கொள்ளாமை. | 2.4.1(ஈ) |
| | | 6. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகனப் பயன்பாட்டிலான குறைபாடுகள் | 2.6(அ) |
| | | 2. | வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல். | 2.6(ஆ) |
| | | 3. | வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல். | 2.6(இ) |
| | | 4. | கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல். | 2.6(ஈ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. | வருடாந்த பாதீட்டு எல்லையினை மிகைத்து கடப்பாடுகளை ஏற்படுத்தல். | 2.7(அ) |
| | | 2. | பொறுப்புகளை அதிகரித்து பதிவு செய்தல். | 2.7(இ) |

| | | | |
|---|---|---|---|
| 127(5) | அமைச்சின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை<br>2. மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 2.10(அ)<br>2.10.(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.11 |

## 2.1 அமைச்சின் பிரதான பணிப்பொறுப்புகள்

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்கு மற்றும் உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவகம் மற்றும் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியம் ஆகிய நிறுவனங்களின் உரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

(ஆ) மாகாண சபைகளுக்குரிய பணிகளை மேற்பார்வை செய்தல்.

(இ) மாகாண சபைகளின் அமைச்சர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

(ஈ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அரசின் கொள்கைகள்.

(உ) பொது வசதிகளின் அபிவிருத்திக்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.

(ஊ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தின் அனைத்து கோணங்களிலும் ஆராய்சிகளை நடாத்துதல்.

(எ) உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான இலங்கை நிறுவனம் மற்றும் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுக்குரிய நடவடிக்கைகள்.

(ஏ) மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

**2.2 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய பணிப்பொறுப்புகள்**

அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிப்பொறுப்புகள் பின்வருமாறு.

| | அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் | தாபிப்பதற்கான அதிகாரம் | பணிப்பொறுப்பு |
|---|---|---|---|
| (i) | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவகம் | 1999 இன் 31 ஆம் இலக்க உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டம் | உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்களிப்பாளர்களுக்கு, உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் பணிப்பொறுப்புகளை மிகவும் செயற்திறனாக நிறைவேற்றக்கூடிய வகையில் பங்களிப்பாளர்களுக்கு, உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்.<br><br>மாகாண மற்றும் உள்ளூராட்சி துறையின் மதியுரை தன்மையிலான ஒப்படைப்புகளை கையேற்றல்.<br><br>மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து பிரிவுகள் தொடர்பிலும் ஆராய்சிகளை நடாத்துதல், மேம்படுத்தல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல். |
| (ii) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | 1961 இன் 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் | உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் வருமான ஈட்ட செயற்திட்டங்களுக்கு தேவையான கடனை வழங்குதல். |

**2.3 பெருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புகள்**

**2.3.1 செயலாற்றல்**

**அமைச்சின் அலுவலகத்தின் தூரநோக்கம் மற்றும் செயற்பணி**

அமைச்சினால் நிறைவேற்றப்பட வேணண்டிய பணிப்பொறுப்புகளை மேற்கொண்டதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை உள்ளடக்கும் வகையில் தூரநோக்கு மற்றும் செயற்பணி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 9 பிரதான பணிகள் காணப்பட்டதுடன், அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 2 நியதிச்சட்ட நிறுவனங்களின் மற்றும் 18 வெளிநாட்டு செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை

பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி தொடடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டினை அடிப்படையாக கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் (Activity Plan), நடைமுறைப்படுத்தப்பட்ட காலச்சட்டகம் (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடைவு/பெறுபேறு (Output/Outcome) மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படடாமை**

---

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய அமைச்சினால் 43 பிரதான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அவற்றுள் 39 பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவ்வாறு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள் மற்றும் அதற்காக ரூபா 1,108.5 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| | **பிரதான பணிப்பொறுப்புகள்** | **நிதியீட்டம்** | **ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு** |
|---|---|---|---|
| | | | **ரூபா மில்லியன்** |
| (i) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 100 கம்பெக்டர் வாகனங்களை விநியோகித்தல். | உள்நாட்டு நிதி | 1100.0 |
| (ii) | எல்பிட்டிய பிரதேச சபையின் கூட்டெரு நிலையத்தை அபிவிருத்தி செய்தல். | உள்நாட்டு நிதி | 4.0 |
| (iii) | மாத்தளை மாநகர சபையின் கழிவு மீள்சுழற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல். | உள்நாட்டு நிதி | 4.5 |
| | **மொத்தம்** | | **1108.5** |

செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய மேற்படி பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குப்பைகளை சேகரிப்பதன் மூலம் மற்றும் மீள்சுழற்சி செய்வதன் மூலம் பொருத்தமான குப்பை சேகரித்தலின் மற்றும் மீள்சுழற்சி செய்தலின் பெறுபேறுகளை

பெற்றுக்கொள்வதற்கு (Output) எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகளை திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்ற முடியாமையால் அந்த பெறுபேற்றினை கைப்பற்றுவதற்கு முடியாது போயிருந்தது. அதன் காரணமாக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு செய்திருந்த ரூபா 1,108.5 மில்லியன் நிதியேற்பாடு பயனற்று போயிருந்தது.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிடல்**

அமைச்சினால் பிரதான பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த பொதிலும், அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | |
| (i) | உள்ளூராட்சிக்கான இலங்கை நிறுவனத்திற்காக புதிய கட்டிடமொன்றினை நிர்மாணித்தல் | 219.5 | 2013 திசெம்பர் 05 | 43.8 | ஆழ்துளையிடல் அத்திவாரம் உரிய முறையில் நிர்மாணிக்கப்படாமை. |
| (ii) | பெலிஅத்த நகர அபிவிருத்தி | 638.0 | 2013 | 68.0 | திட்டம் வேறுபடல். |
| (iii) | பல்லேபொல நகரின் தகவல் தொழில்நுட்ப நிலையக் கட்டிடத்தினை புதுப்பித்தல். | 1.2 | 2015 செப்தம்பர் 01 | 0 .25 | ஒப்பந்ததாரர் இடைநடுவில் கைவிட்டுச்சென்றமையால் தகுதியான ஒப்பந்ததாரரொருவர் இல்லாதிருத்தல். |
| (iv) | தமன பிரதேச சபையின் சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணித்தல் | 7.13 | 2013 | 1.4 | வார இறுதிச் சந்தை அமைந்துள்ள இடம் சுற்றுலா விடுதிக்கு பொருத்தமற்றிருத்தல். |
| (v) | அக்கறைப்பற்று மாநகர சபையின் பொது சந்தைக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் (கட்டம் II) | 37.76 | 2014 | 7.55 | காணிப் பிரச்சினைகள் மற்றும் பணிகளை நிறைவு செய்ய நிதியேற்பாடு இல்லாதிருந்திருந்தமை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | இப்பாகமுவ பிரதேச சபையின் கழிவு சேகரிக்கும் நிலையத்தினை நிர்மாணித்தல். | 0.8 | 2015 | 0.8 | இப்பாகமுவ பிரதேச சபைக்குரிய உதுருபச்ச விகாரையின் காணியில் 80 பேர்ச் அளவில் உக்காத குப்பைகளை சேகரிக்கும் களஞ்சியமொன்றினை நிர்மாணித்த போதிலும், பின்னரட குப்பைகளை அகற்றும் போது கிராம மக்களின் எதிர்ப்பின் காரணமாக அங்கு குப்பை கொட்டுதல் நிறுத்தப்பட்டமை. |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி | நிறைவு செய்யப்பட்ட திகதி | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | ரூபா மில்லியன் | |
| 9 மாகாணங்களுக்காக ஸ்க்ரூ வகையிலான கூட்டெரு இயந்திரத்தினை தாபிப்பதற்கு தேவையான கட்டிடத்தினை நிர்மாணித்தல் | 882.60 | 2017 மே 01 | 2017 ஆகஸ்ட் 31 | நிறைவு செய்யப்படவில்லை.<br>செயன்முன்னேற்றம் 10 சதவீதமாகும். | 58.09 | காணிகளை தீர்ப்பனவு செய்தல் மற்றும் காணியை பொருத்தமான நிலைக்கு உள்ளாக்குதல் தாமதமடைதல். |
| வட மத்திய மாகாணத்தின் தலாவ பிரதேச சபையின் கழிவு நிலையத்தினை அபிவிருத்தி செய்தல் | 3.0 | 2017 மார்ச் 01 | 2017 ஒக்தோபர் 30 | நிறைவு செய்யப்படவில்லை.<br>செயன்முன்னேற்றம் 60 சதவீதமாகும். | 1.80 | கட்டுநிதி கிடைக்காமை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சபரகமுவ - இரத்தினபுரி நகரசபையின் மலக்கழிவு (மீள்சுழற்சி) கட்டமைப்பினை நிர்மாணித்தல். | 28.0 | 2017 மார்ச் 01 | 2017 ஒக்தோபர் 30 | நிறைவு செய்யப்படவில்லை.<br><br>செயன்முன்னேற்றம் 20 சதவீதமாகும். | 1.80 | நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டவாறு காணப்படுகின்றன. |
| உள்ளூராட்சி விளையாட்டுக்களை – தேசிய மட்டத்தில் நடாத்துதல். | 2 | 2017 செப்தம்பர் முதலாம் வாரம் | 2017 ஒக்தோபர் 4 ஆம் வாரம் | | - | தேசிய மட்டத்திலான போட்டிகளை நடாத்தாது இருக்க தீர்மானித்தல். |

## 2.4 நடைமுறைப்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உள்நாட்டு நிதிகளை ஈடுபடுத்தி அமுல்படுத்தப்படும் 17 செயற்திட்டங்களுக்காக ரூபா 12,754.5 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடும், 18 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களுக்காக ரூபா 17,311.2 மில்லியன் நிதியேற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் முறையே ரூபா 6,547.6 மில்லியன் மற்றும் ரூபா 12,247.1 மில்லியன் எனுமாறு ரூபா 18,794.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 11,270.9 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 37.48 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.4.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

பின்வரும் செயற்திட்டங்களுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டத்தின் பெயர் | நிதியீட்டம் செய்யப்படுவது | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் |
| (i) | கொழும்பு பெருநகர் கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கட்டம் 3 | ஐரோப்பிய முதலீட்டு வங்கி | 160 |
| (ii) | 151 கழிவு சேகரிக்கும் இயந்திரங்களை விநியோகிக்கும் செயற்திட்டம் | கொரிய அரசாங்கம் | 1660 |

| | | | |
|---|---|---|---|
| (iii) | குறைந்த வசதிகளுடனான (எழுச்சிபெறும்) பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டம். | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 2400 |

**(ஆ) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சில பணிகளை கைவிடல்**

---

எந்தவொரு கற்கையொன்றினையும் மேற்கொள்ளாது புரநெகும செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கிருந்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,600 மில்லியன் தொகையான தனமல்வில புதிய நீர் வழங்கல் முறைமை மற்றும் மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 573 மில்லியனான கல்கமுவ நீர் வழங்கல் செயற்திட்டங்கள் நீர் மூலங்கள் இல்லாதிருந்தமையால் கைவிடப்பட்டிருந்தன.

**(இ) செயற்திட்ட நிதியினை பயன்படுத்தாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்தல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). அறிவு மையத்தினை அடிப்படையாக கொண்ட பாடசாலைக் கட்டமைப்பினை மீளமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக தென் மாகாணத்திற்காக ரூபா 280 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பொது திறைசேரியிலிருந்து ரூபா 224 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 140.38 மில்லியன் தொகையான பணம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 72.95 மில்லியனான பணம் செலவிடப்படாது நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii). 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டிற்கமைய ஊவா மாகாணத்திற்காக ரூபா 320 மில்லியனான பணம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பொது திறைசேரியிலிருந்து ரூபா 257 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் ரூபா 121.26 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், செலவிடப்படாத ரூபா 103.42 மில்லியன் பணம் மாகாண சபையால் பேணிச்செல்லப்படும் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**(ஈ) செயற்திட்டத்தை நிறைவு செய்தமையின் பின்னரான பிரதிபலன்கள்**

---

செயற்திட்டத்தை நிறைவு செய்ததன் பின்னர் அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைத்துள்ளாதா, செலவிடப்பட்ட பணம் மற்றும் பெற்றுக்கொண்ட பிரதிபலன் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i). புரநெகும செயற்திட்டத்தின் 2017 யூன் 30 ஆந் திகதி நிறைவடைந்த முதலாம் கட்டத்தின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

| | மாகாணம் | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் மற்றும் செயற்திட்டத்தின் தன்மை | செலவினம் | கையளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| | --------------- | ----------------------------------------------- | ---------------- | ---------------------- |
| | | | ரூபா மில்லியன் | |
| * | வட மத்திய | லங்காபுர பி.ச – தல்பொத்த பேரூந்து தரிப்பிடம் மற்றும் பொது மலசலக்கூடம் | 30.67 | 2016.10.03 |
| * | வட மத்திய | புல்நேவ பி.ச – வாரச்சந்தை | 16.99 | 2014.08.23 |

(ii). தேவைகள் இனங்காணப்பட்டு போதியளவான கற்கையொன்றின் பின்னர் உப செயற்திட்டத்தினை தெரிவு செய்யாமையால் பின்வரும் செயற்திட்டங்கள் செயலற்றுக் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

| | மாகாணம் | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் மற்றும் செயற்திட்டத்தின் நிலை | செலவினம் | ஒப்படைக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| | ------------- | ---------------------------------------- | --------------- | ----------------- |
| | | | ரூபா மில்லியன் | |
| * | வடமேல் | வனாதவில்லுவ பி.ச. – நீர் விநியோக முன்மொழிவு முறைமை | 64.83 | 2017.06.30 |
| * | வடமேல் | ரிதீகம பி.ச. – பொது பேரூந்து தரிப்பிடம் | 44.05 | 2017.03.29 |
| * | வடமேல் | மாவத்தகம பி.ச. - பேரூந்து தரிப்பிடம் | 43.79 | 2016.12.06 |
| * | வடமேல் | பொல்பித்திகம பி.ச. – நீர் விநியோக முன்மொழிவு முறைமை | 58.32 | 2017.06.30 |
| * | மத்திய | லக்கல பல்லேகம – வாரச்சந்தை | 26.9 | 2016.10.31 |
| * | மத்திய | வில்கமுவ - மயானம் | 16.52 | 2016.08.11 |
| * | மத்திய | ரத்தொட பி.ச. – வாரச்சந்தை | 12.75 | 2015.0317 |
| * | வட மத்திய | இபல்லோகம பி.ச. – சுத்திகரிப்பு நிலையம் | 2.81 | 2016.03.01. |
| * | வட மத்திய | திரப்பனே – சுத்திகரிப்பு மலசலகூடம் | 2.5 | 2014.08.15 |
| * | தெற்கு | கும்புருபிட்டிய பி.ச. – பேரூந்து தரிப்பிடம் | 55.80 | 2016.06.30 |
| * | தெற்கு | கிரம கட்டுவன பி.ச. – பேரூந்து தரிப்பிடம் | 36.29 | 2016.03.23 |
| * | தெற்கு | திஸ்ஸமஹாராம பி.ச. – மீன் விற்பனை நிலையம் | 5.38 | 2015.05.14 |

| | | | | |
|---|---|---|---|---|
| * | தெற்கு | சூரிய வெவ பி.ச. – மீன் விற்பனை நிலையம் | 2.28 | 2016.06.15 |
| * | ஊவா | மீகஹகிவுல பி.ச. – பேரூந்து தரிப்பிடம் | 48.05 | 2017.04.24. |
| * | ஊவா | வெல்லவாய பி.ச. – மயானம் | 18.30 | 2017.01.26 |
| * | மேல் | மதுராவல பி.ச. – திக்லந்த நீர் விநியோகம் | 28.62 | 2016.10.10 |

(iii). புரநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் பகுதிகள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | மாகாணம் | உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர் மற்றும் செயற்திட்டத்தின் நிலைமை | செலவினம் | கையளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| | ----------- | ------------------------------------------ | ---------------- | ------------------- |
| | | | ரூபா மில்லியன் | |
| * | ஊவா | பண்டாரவல பி.ச. – அலுவலக கட்டிடம் மற்றும் வாரச்சந்தை | 35.86 | 2016.10.28 |
| * | மேல் | வல்லாவில பி.ச. – பல்நோக்கு கட்டிடம் | 23.89 | 2015.12.15 |
| * | மத்திய | இரத்தோட்டை பி.ச. – சுகாதார மற்றும் கர்ப்பிணிகள் பிணியாய்வு | 15.62 | 2015.01.22 |

(iv). பல்நோக்கு கட்டிடமாக திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பின்வரும் கட்டிடங்கள் பிரதேச சபை அலுவலகங்களை நடாத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

| | மாகாணம் | உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர் மற்றும் செயற்திட்டத்தின் நிலைமை | செலவினம் |
|---|---|---|---|
| | ------------ | -------------------------------------------------------- | ----------------- |
| | | | ரூபா மில்லியன் |
| * | மத்திய | மினிப்பே பி.ச. - ஹசலக பல்நோக்கு கட்டிடம் | 62.35 |
| * | மத்திய | பாத்தஹேவாஹெட்ட பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 51.75 |
| * | மத்திய | வலப்பன பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 46.71 |
| * | தெற்கு | கொட்டபொல பி.ச. – தெனியாய பல்நோக்கு கட்டிடம் | 45.10 |

| | | | |
|---|---|---|---|
| * | தெற்கு | கரன்தெனிய ஊரகஸ்மன்ஹன்திய பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 34.13 |
| * | சப்ரகமுவ | அரநாயக்க பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 51.92 |
| * | ஊவா | பதுள்ள பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 49.40 |
| * | ஊவா | ரிதீமாலியத்த பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 47.32 |
| * | வயம்ப | உடுபத்தாவ பி.ச. - பல்நோக்கு கட்டிடம் | 46.36 |

(v). மத்திய மாகாணத்தின் உடபலாத பிரதேச சபையின் நீர் விநியோக செயற்திட்டத்தின் கீழான பணிகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 208.53 மில்லியன் செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்ததாரரால் 2018 மே 15 ஆந் திகதி வரையிலும் நீர் விநியோக செயற்திட்டங்களை உரிய பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வாகனங்களின் பயன்பாடு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i). எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கமைய எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ii). வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் அமைச்சின் பெயர் காட்சிப்படுத்தப்படாமை

1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2002/1 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை கடித்திற்கமைய வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் அமைச்சின் பெயர் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

2017 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்குரிய ஜீப் வண்டிகள் 03 சனாதிபதி செயலகத்திற்கும் 2016 ஆம் ஆண்டின் போது ஜீப் வண்டியொன்றும் 02 கெப் வண்டிகளும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சிற்கும் முறையான அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தன.

**(இ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுவதாக கூறப்படும் கட்டிடங்களில் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நடடாத்திச் செல்லப்படுவதுடன், சட்டரீதியாக சுவீகரிக்கப்படாது அந்த கட்டிடங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 8,061,698 செலவிடப்பட்டிருந்தது.

## 2.6 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கடப்பாடுகளை கூட்டிப் பதிதல்**

பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் போதியளவான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 3 செலவின விடயங்களின் ரூபா 1,367 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும் கடப்பாடுகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பொறுப்புகளை கூட்டிப் பதிதல்**

பணிகள் அல்லது வழங்கல்கள் நிறைவு செய்யப்பட்டு பற்றுச்சீட்டு (பட்டியல்கள்) முன்வைக்கப்பட்டிராத போது ரூபா 122,902,543 பெறுமதியான பொறுப்புகள் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

**(இ) பொறுப்புகள் கடப்பாடுகளாக கணக்கு வைக்கப்பட்டமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவிற்காக முன்வைக்கப்பட்ட ரூபா 1,340,306 தொகையான பட்டியல்கள் பொறுப்புகளாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், கடப்பாடுகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii). 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் (ஆ) பந்திக்கமைய ரூபா 1,032,629 தொகை ஆளனி வேதனங்கள் மற்றும் படிகள் கடப்பாடுகளுடன் தொடர்பற்றிருந்த போதிலும், அவை கடப்பாடுகளாக அறிக்கையிடப்பட்டிருந்தன.

## 2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் பாவனைக்காக 2010 ஒக்தோபர் 25 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சனாதிபதி அலுவலகத்திற்குரிய குண்டு துளைக்காத ஜீப் வண்டியொன்று வழங்கப்பட்டிருந்தது. முன்னாள் அமைச்சரின் அறிவுரைகளுக்கமைய அந்த வாகனம் பழுதுபார்த்தல்களுக்காக உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கு 2014 யூன் 11 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், வாகனத்தில் சேதமடைந்துள்ள முற்பகுதி மற்றும் பின்புற கண்ணாடிகளை புதிதாக இடுவதற்காக ரூபா 16,220,008 தொகையான மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 3,237,079 தொகையான பட்டியலொன்று 2015 செப்தம்பர் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதியேற்பாடு இல்லாதிருந்தமையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய 2018 சனவரி 23 ஆந் திகதியளவில் 9 கவஷிமா கூட்டெரு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 7 இயந்திரங்களும் உள்நாட்டு முகவர் நிறுவனத்தின் பொறுப்பில் காணப்பட்டது.

(ஆ) கூட்டெரு நிலையத்தை தாபிப்பதற்கு தேவையான தீர்ப்பனவு செய்தல் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களின் பொறுப்பான போதிலும், அது தொடர்பில் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பினை மதிப்பிடுவதற்காக போதியளவான தகவல்கள் இல்லாதிருந்தது.

(இ) கூட்டொரு இயந்திரங்களை கொள்வனவு செய்ய முன்னர் காணி மற்றும் இயந்திரகூடம் தொடர்பிலான பணிகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருந்த போதிலும், இது தொடர்பான உரிய திட்டமொன்று இல்லாதிருந்தமையால் அரச பணத்தை உரிய முகாமைத்துவத்துடன் பயன்படுத்தியிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கூட்டெரு உற்பத்தியுடன் மற்றும் பிற முக்கியமான பிரிவான உக்காத மற்றும் ஆபத்தான கழிவுகளை அப்புறப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைச்சின் 100 உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களை தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் கீழ் ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இலங்கையின் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினதும் தலைமை அலுவலகங்களை தாபிப்பதற்கான தேவைப்படு, அதன் முக்கியத்துவம் மற்றும் கொள்கையொன்றாக நடைமுறைப்படுத்தும் தேவைப்பாடு தொடர்பில் அனைத்து மாகாண சபைகளினதும் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தலைமை அலுவலகங்களுக்காக கணனி மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் பெறுகைத் திட்டத்தினை பரீட்சிக்கும் போது இந்த பணி 2017 மார்ச் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு மே 21 ஆந் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த உடன்படிக்கையை கைச்சாத்திடல் நவம்பர் மாதம் இடம்பெற்றிருந்தது. அவ்வாறே திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணனி மற்றும் உப பாகங்கள் விநியோகிக்கப்பட்டிருந்நவில்லை.

**2.9 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 249 | 230 | 19 | 7.6 |
| | மூலதனம் | 4,511 | 2,949 | 1,562 | 34.6 |
| | **மொத்தம்** | **4,760** | **3,179** | **1,581** | **33.2** |
| **2014** | மீண்டுவருபவை | 1,583 | 1,274 | 310 | 19.6 |
| | மூலதனம் | 9,528 | 8,243 | 1,284 | 13.5 |
| | **மொத்தம்** | **11,111** | **9,517** | **1,594** | **14.4** |
| **2015** | மீண்டுவருபவை | 233,151 | 168,558 | 64,593 | 27.7 |
| | மூலதனம் | 65,284 | 58,436 | 6,847 | 10.5 |
| | **மொத்தம்** | **298,435** | **226,994** | **71,440** | **23.9** |
| **2016** | மீண்டுவருபவை | 2,265 | 1,130 | 1,135 | 50.1 |
| | மூலதனம் | 26,662 | 24,850 | 1,812 | 6.8 |
| | **மொத்தம்** | **28,927** | **25,980** | **2,947** | **10.3** |
| **2017** | மீண்டுவருபவை | 1,900 | 427 | 1,473 | 77.5 |
| | மூலதனம் | 35,953 | 18,908 | 17,045 | 47.4 |
| | **மொத்தம்** | **37,853** | **19,335** | **18,518** | **48.9** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

12 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,260 மில்லியனான தேறிய நிதியேற்பாட்டில் எதுவித பயன்பாடும் மேற்கொள்ளாது முழுமையாக சேகரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

32 செலவின விடயங்களுக்காக ரூபா 23,030 மில்லியனான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 10,783 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், சேமிப்பானது தேறிய நிதியேற்பாட்டில் 22 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15501 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 14.50 | 14.43 | 5.3 | 7.4 | 35.00 | 34.17 |

**நிலுவைக் கடன் மீதிகள்**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நீங்கலாக ரூபா 365,835 ஆக இருந்ததுடன், இந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 17 சந்தர்ப்பங்களில் ரூபா 318,915 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

## 2.12 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கணனி உப மற்றும் பாகங்கள் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) |
| (இ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஈ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (உ) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

**2.13 மனிதவள முகாமைத்துவம்**

**2.13.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்**

மேற்படி 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 125.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நபருக்கான செலவினம் ரூபா 722,121 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 35 | 26 | 09 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 04 | 03 | 01 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 150 | 100 | 50 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 63 | 43 | 20 |
| (v) | அமைய / ஒப்பந்தம் | 03 | 02 | 01 |
| | | **255** | **174** | **81** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 81 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய அ.நி.சு. 25/2014 இன் பிரகாரம் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களை அமைச்சின் பதவியணிக்கு உள்ளடக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ள போதிலும், இரண்டாம் நிலையிலான 12 ஊழியர்கள் மற்றும் ஆரம்ப நிலையிலான 16 ஊழியர்கள் இது வரையிலும் அமைச்சின் பதவியணிக்கு உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளம்**

அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் | 01 | இலங்கை உயர் தொழில்நுட்ப கற்கைகள் நிறுவகம் | 2015 நவம்பர் 05 முதல் 2018 நவம்பர் 05 ஆந் திகதி வரை |
| மேலதிகப் பணிப்பாளர் | 01 | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனம் | 2015 சனவரி 04 ஆந் திகதி முதல் ஒழுக்காற்று பரிசோதனைகள் முடிவடையும் வரை |
| பொறியியல் ஆலோசகர் | 01 | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனம் | 2015 சனவரி 04 ஆந் திகதி முதல் ஒழுக்காற்று பரிசோதனைகள் முடிவடையும் வரை |
| அலுவலக உதவியாளர் | 02 | உள்ளூராட்சி தொடர்பான இலங்கை நிறுவனம் | 2017.07.01 முதல் இது வரையிலும் |
| சாரதி | 01 | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் | 2016 செப்தம்பர் 06 ஆந் திகதி முதல் இது வரையிலும் |

**(ஈ) பதவியணியை பயிற்றுவித்தல்**

பதவியணியை பயிற்றுவித்தல் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i). 2017 ஆம் ஆண்டில் எவ்வித பயிற்சியையும் பெற்றிராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 83 ஆகும்.

(ii). மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 ஆண்டுகளினுள் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்த அளவு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | தேறிய நிதியேற்பாடு | செலவினம் | சேமிப்பு | சேமிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| ---------- | ------------------ | ------------- | ------------ | ---------- |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 2013 | 1,250,000 | 1,096,511 | 153,489 | 12.28 |
| 2014 | 2,000,000 | 1,996,338 | 3,662 | 0.18 |
| 2015 | 1,860,000 | 1,858,213 | 1,787 | 0.09 |
| 2016 | 1,500,000 | 1,421,880 | 78,120 | 5.21 |
| 2017 | 2,500,000 | 720,120 | 1,779,880 | 71.2 |

மீளாய்வாண்டிற்கு முன்னைய வருடங்களில் பதவியணியை பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணம் போதியளவானதாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களின் கடமைகளின் செயலாற்றலை உயர்த்துவதற்காக ஈடுபடுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் கணக்காய்விற்கு திருப்தி கொள்ள முடியாதிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல் குறைந்தமையால் தேறிய நிதியேற்பாட்டில் 71 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.14 அரச ஊழியர்களுக்கு பிணை வைத்தல்**

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அரசின் பணம் அல்லது பொருட்களை பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.